முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 280/2022

நாள்: 18.02.2026

வாதி தரப்பு 1 வது சாட்சி இ.நி.ம.எண்.178/2025 ன் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு திரு.G.ரேவதி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் | வயது | : | 60 |
| தந்தை பெயர் | : | ஜெயராமன் | தாலுக்கா | : | தஞ்சாவூர். |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | ஓய்வு பெற்ற ஆசிரியர் |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) மாரியம்மன்கோவிலில் உள்ள சொத்து என் அம்மா உயிருடன் இருக்கும்போது வாங்கிய சொத்து என்றால் சரிதான். நான் சம்பாதித்து கொடுத்த பணத்தை வைத்து வாங்கியது-

2) தஞ்சாவூர் சிவராயர் தோட்டம் 1ம் தெருவில் உள்ள எங்கள் குடும்ப சொத்து வீட்டில் மாடியில் ஒரு ரூமில் தங்கி செல்வேன்.. தற்போது கோயம்புத்தூரில் உள்ளேன்.

3) என் அம்மா உயிருடன் இருக்கும்போது எங்கள் குடும்ப நலனுக்காக என் பெயரில் இன்சூரன்ஸ் பாலிசி போட்டுள்ளரா என்றால் எல்லாருடைய பெயரிலும் போட்டுள்ளார். அதுபோல் என் பெயரிலும் போட்டுள்ளார்.

4) தஞ்சாவூர் புதுபஸ்ஸடாண்டு காவேரி நகரில் உள்ள கடை கட்டிடம் பேங்க் லோன் வாங்கி கட்டப்பட்டது. அந்த கட்டிடம் கட்டுவதற்கு முன்பு வங்கி லோன் ஏதாவது இருந்ததா

என்றால் இல்லை.

5) என் மகன் தினேஷ்குமார் பெயரில் விளார் ரோட்டில் ஒரு மனை கட்டு உள்ளது. அது நான் வாங்கியது. அந்த மனைகட்டு எங்கள் கூட்டுகுடும்ப வருமானத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்து என் மகன் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொந்தமாக சம்பாதித்து சீட்டு போட்டு வாங்கிய மனை கட்டு ஆகும்.

6) சிவராயர் தோட்டத்தில் உள்ள பழைய வீட்டை இடித்து புதிய வீடு கட்டுவதற்காக தஞ்சாவூர் ஜங்சன் இந்தியன் வங்கியில் ரூ.16 லட்சம் கடன் வாங்கி கட்டப்பட்டது என்றால் சரிதான். எல்லோரும் சேர்ந்துதான் வாங்கினோம். மறுபடியும் அதே வங்கியில் ஒரு லோன் வாங்கினோம் என்றால் சரிதான்.

7) கடன் சுமையை குறைப்பதற்காக தஞ்சாவூர் கத்தோலிக் சிறியன் வங்கியில் இருந்த பிக்சட் டெபாசிட் தொகையை முடித்து எடுத்தோம் என்றால் அது என் அண்ணன் குபேந்திரனுக்குதான் தெரியும்.

8)அந்த பிக்சட் டெபாசிட் தொகை ரூ.6,50,000/த்தை நாங்கள் லோன் வாங்கியிருந்த வங்கி கணக்கில் வைப்பீடு செய்து கடன் சுமையை குறைத்தோம் என்றால் அது என்அண்ணனுக்குதான் தெரியும்.

9) நான் வேண்டுமென்றே மாரியம்மன்கோவில் அருகில் உள்ள வீட்டினையும் என் மகன் பெயரில் தஞ்சாவூர் விளார் ரோட்டில் உள்ள மனைக்கட்டையும் இந்த வழக்கில் காட்டாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த இரண்டு சொத்துக்களுமே கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றும் அந்த சொத்துக்களை காட்டாமல் இருந்ததால் இந்த வழக்கை தள்ளுபடி சய்யவேண்டுமென்றால் சரியல்ல.

10) என்பெயரில் இருந்த ஆயுள் காப்பீட்டு தொகை முதிர்வு ஆகி என்னுடைய வங்கி

கணக்கில் செலுத்ததப்பட்டது என்றால் சரிதான். அந்த தொகை கூட்டு குடும்ப நலனுக்காக உள்ள தொகை என்றும் அந்த தொகையை வேண்டுமென்றே சொத்துவிபரத்தில் காட்டாத காரணத்தினால் இந்த வழக்கு அதன்அடிப்படையில் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. அவர்களுக்குரிய காப்பீட்டு தொகை முதிர்வு ஆகி அவரவர்கள் வங்கி கணக்கிற்கு வரவு ஆகிவிட்டது.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்